# நடையியல் நோக்கில் நாவுக்கரசர்

சுபதினி ரமேஸ்

சைவசமய குரவர்களில் ஒருவர் திருநாவுக்கரசர்; அப்பர் என்று அழைக்கப்படுபவர். அப்பருடைய வாழ்வும் நோக்கும் தனித்துவமானவை. இளம் வயதிலிருந்தே அப்பரின் வாழ்வு சோதனைக் களமாகவே விளங்கி வந்திருக்கிறது. திருநாவுக்கரசர் 4900 பதிகங்கள் பாடினார் என்பது சைவமரபு. 'சொற்குறுதிக்கு அப்பர்' என இவரைப் பாராட்டுவதுண்டு.

இவர் பதிகங்களில் இவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள், துன்ப நிகழ்ச்சிகள், இடைவிடா உழைப்பினாலும், முயற்சியாலும் அடைந்த வெற்றிகள் இவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு திருநாவுக்கரசர் கையாண்ட மொழிநடை இவ்வாய்வினைப் பூரணப்படுத்துவதற்கு உறுதுணை புரியுமெனலாம்.

## திருநாவுக்கரசரின் ஆளுமை

தருமசேனர் என்ற பெயரோடு சமணத்தில் வாழ்ந்த அப்பருக்குப் பல்லவ மன்னனாலும், சமணர்களாலும் ஏற்பட்ட சோதனைகளும், வேதனைகளும் அப்பரின் ஆளுமையை மேம்படுத்தித் தனிப்பெரும் அருட்செல்வராகவும், வைராக்கிய சீலராகவும் பிற்காலத்தில் அவரை மாற்றியமைத்தன. சைவசமயம் அவருடைய ஆழ்மனதில் வேரூன்றியதால் சிவநெறியில் சைவனாக வாழ்ந்து காட்டினார். கற்றிலேன் கலைகள் ஞானம் கற்றவர் தங்களோடும் உற்றிலேன் ஆதலாலே உணர்வுக்கும் சேயனானேன் என்றும் அறிவிலேன், தூயனல்லேன், நாயினுங் கடைப்பட்டேன், நீசனேன், பாவியேன் பிறந்தனேன், பேயேன், நிறைவிலேன், மதியிலேன், கொச்சையேன், குறியிலேன், ஏழையேன், ஞானியல்லேன் என்றும் பலவாறாகத் தம்மைத் தாழ்த்திக் கொண்டுள்ளார். இவற்றின் மூலம் அவர் தம் தாழ்வு மனப்பாங்கை உணர்த்தியிருந்தார்.

இது அவருக்கு நிலையாமைக் கருத்துக்களில் பற்றினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆகவே இளமையிலேயே வாழ்க்கையில் விரக்தியடைந்து, வாழ்க்கை நிலையாமையைக் கருத்திற் கொண்டதுமான சமண சமயத்தில் அப்பர் சங்கமமாகியது வியப்புக்குரியதன்று.

இறைவனுக்கு முன்னால் அப்பரிடம் இத்தகைய தாழ்வு மனப்பாங்கைக் காண முடிகிறது. ஆனால் உலகினர்க்கு முன்னால் அப்பர் தீரமும், வீரமும், உறுதியுங் கொண்ட துறவியாகவே விளங்கினார்.

*"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்...*
*தமிழோடிசை பாட மறந்தறியேன்...*
..........
.........."

என்று இறைவனைப் பாடிய நாவுக்கரசர், சைவசமயி ஒருவன் வாழ்க்கையில் தங்கருமம் செய்வதோடு பக்தி பூர்வமாக நாளாந்தம் இறைவனைப் பூசை செய்து வழிபடவும் வேண்டுமென்று வாழ்ந்து காட்டியுள்ளார்.

அவர்கள் தம் வாழ்வில் என்ன கண்டார்கள், தம் வாழ்வில் பட்டறிந்த உண்மைகளால் என்ன உணர்வு பெற்றார்கள், அவ்வுணர்வினின்றும் அவர்கள் தெரிந்ததென்ன, நம்மனோர்க்கு அத்தெளிவினால் அவர்கள் உரைக்கும் செய்திகள் யாவை என்பதற்கு அவர்களது தேவாரப்பதிகங்களே சான்று பகரும். இவையனைத்தும் காட்டுவதே அப்பாடல்களில் கையாளப்பட்டுள்ள சொல்லாட்சிகளாகும்.

## தேவாரத் திருப்பாடல் அமைப்பு வகை

திருநாவுக்கரசு சுவாமிகள் அருட்புலவராக விளங்கிய நல்லாசிரியராதலின், அவருடைய பாடல்கள் உறுதியான சொற்களால் இயன்றவை, பொருட் சிறப்பு பொதிந்த சிறப்புடையவை.

இவ்வாறு புகழப்பெறும் சிறப்புடைய அப்பரடிகளை அமுதத் தமிழ்வாக்கும், அப்பெருமானார் வகுத்தருளிய தமிழ் மரபும், இலக்கிய நுட்பங்களும் பிற மாண்புகளும் கருதிய சேக்கிழார் இவரைத் தமிழ் மொழித் தலைவர் (2501) என்றே கூறிப் போற்றுவர். "இன் தமிழுக்கு மன்னனான வாகீசத்திருமுனி (1415) உடையவரசு உலகேத்தும் உழவாரப் படையாளி" (220), வாக்கின் பெருவிரல் மன்னர்"(2172) என்றெல்லாம் சேக்கிழார் பாடும் பகுதியைக் காணலாம்.

மேலும் அப்பரடிகள் தமிழ்க்கவிதை யாப்பில் மேற்கொண்டுள்ள பாட்டியல் வகைகள் தமிழ் இலக்கணத்துடன் பொருத்தப்பாடுடையன. சந்த விருத்தங்களும், விருத்த வகைகளும், கவி விருத்தங்களும், கட்டளைக் கலித்துறைகளும் அவர்கள் பாடலில் கையாளப்பட்டுள்ளமை அவரின் பாடல்களின் மொழிநடைச்சிறப்பைக் காட்டுகின்றன. இது மட்டுமல்லாமல் தாண்டகம் என்ற பாட்டியல் வகையைக் கையாண்டு பாடல்களை இசைத்தமையின் மூலம் "தாண்டகச் சதுரர்" என்ற சிறப்புப் பெயரையும் இவர் பெற்றுள்ளமையை சேக்கிழார் அவர்கள் தமது பெரியபுராண திருப்பாடலால் (1607) விளக்கியுள்ளார்.

*"விளங்கு பெருந் திருமுன்றில்*
*மேவு திருப்பணி செய்தே*
*உளங் கொள்திரு விருத்தங்கள்*
*ஓங்கு திருக்குறுந் தொகைகள்*
*களங்கொள் திரு நேரிசைகள்*
*பல பாடிக் கை தொழுது*
*வளங்கொள் திருப்பதியதனில்*
*பல நாள்கள் வைகினார்"*

இப்பாடலில் நாவுக்கரசர் கையாண்ட விருத்தம், குறுந்தொகை, திருநேரிசை, தாண்டகம் ஆகிய யாப்புவகைகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன.

இவற்றுள் தாண்டகம் என்ற செய்யுள் வகையை அப்பரடிகள் மிகச் சிறப்பாக எடுத்தாண்டுள்ளார் என்பதை அவர் பாடிய ஆறாம் திருமுறை எடுத்தியம்புகிறது. இத்தாண்டகம் வடமொழி இலக்கணம் பற்றி வந்த செய்யுள் என்றும், இது தமிழ் யாப்பேயாகும் என்றும் இருவேறு கருத்துக்கள் உண்டு. மேலும் அளவியல் தாண்டகம், தளவழித்தாண்டகம் என்ற இரு வகைகள் யாப்பருங்கல விருத்தியில்' காணப்படுவதாகவும், பன்னிரு பாட்டியல் என்ற நூலிலிருந்தும், அதன் உரையிலிருந்தும் குறுந்தாண்டகம், நெடுந்தாண்டகம் என்ற இருவகைகள் காணப்படுவதாகவும் இலக்கணக்காரர்களது கூற்றாகும். அப்பரடிகள் அருளிய தாண்டக அமைப்பு, ஒற்றும் குற்றியலுகரமும் நீக்கி எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட ஐவகை அடிகளுள் கழிநெடிலடிக்கு மேலெல்லையாகிய இருபதெழுத்தென்னும் அளவினைக் கடந்து இருபத்தேழெழுத்திற்கு உட்பட்டு வருவதாகும். தாண்டக வேந்தராகி அப்பரடிகள் அந்த வகையை மிக அழகுபடுத்தி இதனை நயம் பெறக் கையாண்டு விளக்கம் புரிந்துள்ளார்.

கி.பி.7ஆம் நூற்றாண்டிற்கு முன் அடைந்திராத செல்வாக்கை இவ் யாப்புவகை அக்காலத்தில் கொண்டிருந்தது. பின்வந்த திருமங்கை ஆழ்வாரும் இவ் யாப்பு வகையை கையாண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தாண்டவமாடும் சிவன்தாள் மலரின்பம் நுகர்ந்த அடிகள், அப்பெருமான் புகழ் பாட இதனை மேற்கொண்டது வியந்து போற்றுதற்குரியதாகும். இப்போது கிடைத்துள்ள அப்பர் திருத்தாண்டகங்களின் தொகை தொளாயிரத்து எண்பத்தொன்று (981) என அறியப்படுகிறது.

## தேவார நடைச்சிறப்பு

நாவுக்கரசரின் தேவாரப்பாடல்கள் தெளிவும், இனிமையும், தூய்மையும் பொருந்திய செந்தமிழ் நடையில் அமைந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். உலகியல் வாழ்வாகிய சமுதாய வாழ்விலும், மெய்ந்நெறி வாழ்வாகிய சமயத் துறையிலும் பெற்ற தம் அனுபவங்களை எளிய நடையில் சிறு, சிறு வாக்கியங்களாக இணைத்து பண்ணோடு பாடப்பட்டுள்ளமை மூலம் நாவுக்கரசரின் நடைச்சிறப்பை நாம் போற்றியே ஆகவேண்டும். உதாரணமாக :

*"மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்*
*போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்*
..........................
...........................
*கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்." (4179)*

என்ற பாடல் சிறப்பாகக் குறிப்பிடப்படக் கூடியதாக இருக்கிறது. இதேபோன்றே இப்பதிகத்தில் காணப்படும் பத்துப் பாடல்களும் குறிப்பிடத்தக்கன. மேலும் பின்வரும் பாடலை நோக்கினால்

*"கைப்போது மலர் தூவிக் காதரித்து வானோர்கள்*
*முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை*
*அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி*
*எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே"*

இப்பாடலடிகள் ஒவ்வொன்றிலும் இலக்கணச்சிறப்பு மிக்க மூவிடப் பெயர்களான "வானோர்கள்" (படர்க்கை), "முதல்வனை" (முன்னிலை), என் மனத்தே வைத்தேனே (தன்மை) முதலியவற்றை வெளிப்படுத்தும் முறைமையை ஏனைய பாடல்களும் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

இதே போன்று நாவுக்கரசு சுவாமிகளின் நாலாம் திருமுறையான 'திரு அங்கமாலை பதிகத்தில் கூட இம் மூவிடப் பெயர்களின் சிறப்பைக் காண முடிகிறது.

*"தலையே நீ வணங்காய்- தலை*
*மாலை தலைக்கணிந்து ....." (4240)*

*"மூக்கே நீ முரலாய் - முது*
*காடுறை முக் கண்ணனை ....." (4246)*

*"நெஞ்சே நீ நினையாய் - நிமிர்*
*புன்சடை நின்மலனை ....." (4245)*

*"ஆக்கை யாற்பயன் என் - அரன்*
*கோயில் வலம் வந்து ....." (4247)*

*"குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு*
*உற்றார் ஆர் உளரோ! ....." (4249)*

இப்பாடல்களில் உள்ள தன்மை, ஒருமை, தன்மைப் பன்மைச் சொற்கிளவிகள் (என், நமக்கு, முதலியவை) மட்டுமல்லாமல், நீ என்னும் முன்னிலை ஒருமையும், படர்க்கையைக் குறிக்கும் கிளவிகள் இங்கு பரமன், மணாளன், கூத்தன், தேவன், பிரான், தலைவன் என கடவுளை வெவ்வேறு பெயர்களாக அழைக்கும் தன்மையும் அடிகளாரின் மொழித்திறனை நன்கு விளக்குகிறது. அதாவது மொழிக்கூறுகளை கையாளும் பாணியானது அவரது நடைச்சிறப்பை மெருகூட்டுகிறது.

அப்பரடிகள் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கூர்ந்துணர்ந்து தேர்ந்து பழுத்த தமிழ்ப்புலவர் ஆதலின் இம்மொழிச்சிறப்பை உணர்ந்து அதனைப் பன்முறை எடுத்து ஓதுவதில் பெருமை கொள்கிறார்.

அடுத்து இவரது பாடல்களில் 'உம்' என்ற இடைச்சொல்லானது கையாளப்பட்ட முறைமை நடையியல் கூறுகளின் சிறப்பு வழக்குகளில் ஒன்றாகும். குறிப்பாக,

*"மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்*
*மூசுவண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே"*

இங்கு வீணையும், மதியமும், தென்றலும், வேனிலும், பொய்கையும் என்பவற்றிலுள்ள 'உம்' என்ற இடைச்சொல் நாவுக்கரசர் இறைவன்பால் கொண்டிருந்த இணையற்ற அன்பினன், இன்பத்தை கண்டும், கேட்டும், உண்டும், உற்றும், உயிர்த்தும் வெளிப்படுத்துவதற்கு காரணியாக அமைந்துள்ளது.

இவை மட்டுமல்லாமல் இவரது திருவையாற்றுப்பதிகத்தில் கையாளப்பட்ட உம் என்னும் இணைப்பு இடைச்சொற்கள் உயர்திணைச் சொற்களில் மட்டுமல்லாமல், அஃறிணை உயிர்களிலும் இறைவனை உவமையாகக் கொண்டு விளிக்கப்பட்டமையை பிடியும், களிறும், கோழியும் பெடையும், குயிலும் பெடையும், மயிலும் பெடையும், பகன்றில்களும், ஏனங்களும், நாரையும், மானும், கிளியும், நாகும், ஏறும் முதலிய சொற்கூட்டங்கள் விளம்புகின்றன.

இறைவன் எழுந்தருளி அருள் வழங்கவும், அதனை மறுத்து, தொழாது சமண மயம் சார்ந்து அங்கு பெற்ற இடர்களை எடுத்தியம்பும்போது, அதனை எதிர்மறைச் சொற்களால் குறிப்பிடும் தாண்டகவேந்தரின் மொழிநடைச் சிறப்பு பின்வரும் தேவாரப்பதிகங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன.

அ). "பத்தனாய் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்தி செய்கே னென்னை நீ யிகழ வேண்டாம்".

(4387 – 4ம் திருமுறை)

ஆ). "கருத்தனாய் பாடமாட்டேன் காம்பன தோளி பங்கா
ஒருத்தரா வறிய வொண்ணாத் திருவுருவுடைய சோதீ.....".

(4388 – 4ம் திருமுறை)

அவை மட்டுமல்லாமல் "மறுமாற்றத் திருத்தாண்டகம்" நாவுக்கரசரின் மனமாற்றத்தை தெரிவிக்கும்போது, அவர் கையாண்ட சொல்லாட்சிகள் அப்பதிகத்தின் மொழிநடைச்சிறப்பை எடுத்தியம்புகின்றன.

"நாமார்க்குங் குடியல்லோம் யமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்ப டோம் நடலை யில்லோம்
ஏமாப்போம், பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்னும் மீளா ஆளாய்
கொய்மலர்ச்சே வடியினையே குறுகினோமே."

(7205 – 6ம் திருமுறை)

திருநாவுக்கரசு சுவாமிகளின் "விடந் தீர்த்த திருப்பதிகமானது எண்ணுப்பெயர்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறப்பு மிக்க தனித்துவமான பாடலடிகளைக் கொண்டதாகும் அவ்வகையில்

'ஒன்று கொலாமவர் சிந்தை யுயர் வரை
ஒன்று கொலாமுய ரும்மதி சூடுவர் .....:" (4335)

எனத் தொடங்கி

*"பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்*
*பத்துக் கொலா மெயி ருந்தெரிந்துக்கன ......" (4344)*

என முடிவுறும் பத்துப் பதிகங்களும் ஆதார எண்ணுப் பெயர்களைக் கொண்ட முதலடிகளாகத் தொடங்கி இறுதிவரை பாடல்களில் கையாளப்பட்ட விதம் சான்றோர் வழக்கு மொழியாக நோக்கப்படுகிறது. இப்பாடல்கள் மட்டுமல்லாமல் திருவாரூர் போற்றித் தாண்டகம், தனித் திருத்தாண்டகம், ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம் போன்றவை இவர் மொழியாட்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

*"நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி*
*நற்றவனே நின் பாதம் போற்றி போற்றி*
*வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி*
*........... (6567)*

மேற்கூறப்பட்ட பாடல்களில் காணப்படும் போற்றி போற்றி என்ற இரட்டைக்கிளவிகள் அப்பாடல்கள் பத்தையும் சிறப்புற வர்ணிக்கின்றன. இவ்வாறே பல பதிகங்களிலும் இத்தகைய இரட்டைக் கிளவிச் சொற்களாக பெயரெச்சங்களும் பயன்படுத்தும் தன்மையையும் காணலாம். (உதாரணமாக வைத்ததுண்டோ, கண்டதுண்டோ, முண்டதுண்டோ).

தனித்திருத்தாண்டகப் பதிகத்தின் சிறப்பை பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகிறது. குறிப்பாக 6ம் திருமுறையில் காணப்படும் இத் தாண்டகப் பாடலின் முதலாவது பாடலை நோக்கினால்,

*'அப்பன்நீ யம்மை நீ ஐயனும் நீ*
*அன்புடைய மாமனும் மாமி யும் நீ*
*ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ*
*ஒரு குலமுஞ் சுற்றமும் ஓரூரும் நீ*
*.............................*
*........................ (7173)*

உறவுச் சொற்களின் பரிணாமத்தை இப்பாடலூடாக இறைவனிடம் காணும் இப்பண்பானது நாவுக்கரசருக்குரிய சிறப்பாகும்.

சுவாமிகள் தாம் செய்த தவறைப் போக்க ஊர் ஊராகச் சென்று க்ஷேத்திராடனம் செய்த வகையை தனது ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் மிக அழகாகப் பாடியுள்ளமை அவர் இறைவன் மேல் கொண்டிருந்த அன்பை, தானே வருந்தி வெளிப்படுத்தியுள்ளார்.

*"தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன் பண்ணி*
*தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்*
*சொல்லிக் குளிரறைப் பள்ளி கோவில்*
*வீரட்டங் கோகரணம் கோடி காவும்*
*.............................. (6944)*

இங்குள்ள பதினொரு பாடல்களும் எண்ணற்ற கோவில் ஊர்களை அட்டவணைப்படுத்துகிறது. மனமிரங்கி ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள ஆலயங்களில் அவர் பாடிய பாடல்கள் அவரின் மொழியாற்றலை தெள்ளெனக் காட்டுகிறது.

தேவாரப்பாடல்களில் கையாளப்படும் இலக்கிய அழகுகள் அவற்றைப் பாடிய நாயன்மார்களின் மொழியாற்றலுக்கு சான்றாகின்றன. அவ்வகையில் நாவுக்கரசரின் நமச்சிவாயப் பதிகத்தில் காணப்படும் உவமைகள், உருவகங்கள் யாவும் இலக்கிய ரீதியான மொழிநடையினைக் கொண்டுள்ளமையை அவரின் பாடலடிகள் மூலம் எடுத்துக் காட்டலாம். உதாரணமாக நமச்சிவாயப் பதிகத்தில் காணப்படும் "பூவினிற் சிறந்த தாமரை போலவும், அரன் அஞ்சாடுதலாற் சிறந்த ஆவினைப் போலவும், கோட்டமில்லாத கோவினைப் போலவும், நாவினுக்கு அருங்கலமாகச் சிறப்பது திருவைந்தெழுத்து என்றும், அகத்திருளைக் கடியும் அக விளக்கு என்றும், சொல்லிற்கண் விளங்கும் சோதி விளக்கு என்றும், அறிவிற்கு அறிவாய் விளங்கும் நல்லக விளக்கு என்றும், 'நமச்சிவாய' என்னும்

திருவைந்தெழுத்தை இனிய உவமைகளால் விளக்கும் நடைச்சிறப்பை பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.

அ). *பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை*
*ஆவினுக் கருங்கலம் அரணஞ் சாடுதல்*
*கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது*
*நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே. (4263)*

ஆ). *இல்லக விளக்கது இருள் கெடுப்பது*
*சொல்லக விளக்கது சோதியுள்ளது*
*பல்லக விளக்கது பலருங் காண்பது*
*நல்லக விளக்கது நமச்சிவாயவே. (4269)*

இந் நாலடிப் பதிகங்கள் இறுதியில் 'நமச்சிவாயவே' என்ற திருவைந்தெழுத்தை கொண்டு முடிவடைவது அவற்றின் சிறப்பாகும்.

அப்பரடிகள் தேவாரங்களில் அவரின் அருட்செயல்களில் கையாளப்பட்ட பல வகைப்பட்ட உவமைகளைக் காணலாம். வினை, பயன், மெய், உரு என்னும் நான்கு வகைகளில் இவ்வுவமைகள் பெரும்பாலும் வினை உவமையாகவே விளங்குகின்றன எனலாம். நாவுக்கரசர் தாம் சைவசமயத்தை விட்டுச் சமணசமயம் புகுந்து இடர்ப்பட்டதை பல உவமைகளின் மூலம் விளக்குகின்றார். சமண சமய உண்மைகளை ஆராய்ந்து கண்டு கொள் என்று அச்சமயத்தார் கூற, அச்சமயத்தில் சேர்ந்து அதனை மேற்கொண்டு, மீளும் வகை அறியாமல் இடர்ப்பட்ட தம் துயர் நிலையை

*"காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்*
*கரை நின்றவர் கண்டு கொளென்று சொல்லி*
*நீத்தாய் கயம்புக நூக்கியிட*
*நிலைக் கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்."* (4ம் திருமுறை)

இங்கு கருதிய பெயர்களைத் தொகுத்து, அதனைக் கூறாது ஒத்த பொருள் ஒன்றை, உரைப்பதை இவ்வகையாகக் கூறுவர். திருவள்ளுவர் தனது குறட்பாக்களில் 'நுனிக் கொம்பர் ஏறினார்', 'பீலிபெய் சாகாடும்'' எனக் கூறிய முறையை ஒட்டியவையாகவே இவ்வமைப்புக்கள் காணப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

மேலும் கனியிருப்பக் காய் கவர்தல், முயல் விட்டுக் காக்கை பின் செல்லல், அறமிருப்ப மறம் விலைக்குக் கொள்ளல், பனிநீராற் பாவை செய்ய முனைதல் ஆகிய உவமைகள் அனைத்தும் சைவசமயம் விட்டுச் சமணசமயம் புக்கு மயங்கியமையால் ஏற்பட்ட கழிவிரக்கத்தால் விளைந்தவையாகும். இவ்வாறு உவமைகள் பலவற்றால் இறைவனை எடுத்துப் போற்றும் அடிகள், இவ்வமைகள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு விளங்குபவன் இறைவன் என பாடியருளியமை ஈங்கு நோக்கத்தக்கது.

இவை மட்டுமல்லாமல் உவமைகளாற் கூற இயலாத அடிகள், உருவகத்தால் அழகுபடுத்தும் உயர் கவிதைகளையும் திருப்பதிகங்களில் கையாண்டுள்ளார்.

*''தாயக் கோயிலில் மனமே அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலுமாகச் செய்யும் அன்புப் பூசனையை அடிகள்*
*அருளுவதும் இனிமையுடையது'' (4ம் திருமுறை).*

கற்பனை கலந்த அப்பரடிகளின் தேவாரங்கள் அவருடைய கவிதையாற்றலை வெளிப்படுத்தும் திறன் கொண்டவையாகும்.

மேலும் பல மொழியியலல்லாத நடையியல் கூறுகளும் இவரது பாக்களில் இனங்காணப்படுகின்றன. பழமொழிகள், இயற்கை வர்ணனைகள் இதிற் குறிப்பிடத்தக்கன. திருஞானசம்பந்தர் பாடல்களில் வர்ணனைகள் விரிவாக இடம்பெற்றிருப்பதுபோல், இவரது பதிகங்களில்

காணப்படவில்லை எனினும் சில இடங்களில் அழகாக இறைவனை வர்ணிக்கும் தன்மையையும் இங்கு காணலாம்.

## சொல்லாட்சியழகு

"சொற்குறுதிக் கப்பரெனச் சொல்லு" என்ற வெண்பாவடி அப்பரடிகளின் சொல்லாட்சிச் சிறப்பை எடுத்துரைப்பதாகும். சொற்களை இடமறிந்து, தரமறிந்து எடுத்தாளும் சிறப்பை அடிகளின் இனிய - எளிய உணர்ச்சிச் சொற்களில் காணலாம்.

சங்க நூல், திருக்குறள் ஆகிய சான்றோர் நூற் சொற்கள் ஆங்காங்கு அப்பரடிகளின் பாடல்களில் திகழ்ந்து, தமிழின் தனிநலங் காட்டி நிற்கின்றன. ஏற்ற சொல்லை ஏற்ற இடத்தில் இனியதொரு பொருளைப் பெற வைப்பதே மேனாட்டறிஞர்களின் சொல்லாட்சிச் சிறப்பு எனப் போற்றுவர். உதாரணமாக,

அ) அன்னை என்னுஞ் சொல்லை 'அன்' என்னுஞ் சில இடங்களில் கையாள்வது அடிகளாரின் இயல்பாகும்.

*"அன் னொப்பானை ------------------" (5ம் திருமுறை : 8)*

*"அன்னே உன்னை யல்லால் ---------------" (5ம் திருமுறை : 3)*

இதனை அடியொற்றி சுந்தரர் பாடுவதும் இங்கு ஒப்பிடத்தக்கதாகும்.

ஆ) உறைப்பு என்னுஞ் சொல்லை உறுதி என்னும் பொருளில் அடிகளார் பாடியுள்ளார்கள்.

*"திறக்கப் பாடிய என்னினுந் செந்தமிழ்*
*உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்" (5ம் திருமுறை : 50)*

இ) நண்பன் என்ற சொல்லால் காதலனைக் குறிக்கும் (5ம் திருமுறை : 9) இடமும் உண்டு. பாடி என்னுஞ் சொல் ஊரைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல்லாகும். பட்டிணம், பாடி, பாக்கம் என்பன நெய்தல் நிலத்தார்களுக்கு வழங்கிய பெயர்களாகும். ஊர்க்காவலை 'பாடிகாவல்' என்பதும் ஒரு மரபாகும். இதனை அடிகளார் வாக்கில் காணலாம்.

*"கோடி காவனைக் கூறிரேற் கூறினேன்*
*பாடி காவலிற் பட்டுக் கழிதிரே---"* (5ம் திருமுறை : 2)

*"கோடி காவனைக் கூறாத நாளெலாம்*
*பாடி காவலிற் பட்டுக் கழியுமே-----"* (5ம் திருமுறை : 6)

இவை போன்றே மேலும் பல சொற்கள் 'இணர்' என்ற சொல்லிலிருந்து இணர்ந்து போன்ற பல வினையெச்சங்கள், நம்பு, மேவு, தவ போன்ற பல உரிச்சொற்கள் முதலியவற்றைத் தக்க இடங்களில் வைத்து கையாண்டுள்ளமை அவரின் சொல்லாட்சிகளின் சிறப்புக்குத் தக்க உதாரணங்களாகும். இவற்றிற்கு அணி சேர்ப்பனவாக இயற் சொல், திரி சொல், திசைச் சொல், வட சொல் ஆகியவற்றால் சொல்லழகு, பொருளழகு கூறுந்திறன் கற்பவர் உள்ளத்தையீர்க்கும் எண்ணற்ற வரிகள் அப்பரடிகளின் பாடல்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

## முடிவுரை

நாவுக்கரசரின் தேவாரங்களை மேலே காட்டிய ஒவ்வொரு நடையியல் கூறுகளின் அடிப்படையில் ஆராய முற்படும்போது அது எண்ணற்றன என்பதை காண முடிகிறது. இதுவரை எடுத்து நோக்கப்பட்ட அம்சங்கள் அப்பருடைய தேவாரங்களில் காணப்பட்ட மொழிநடைச்சிறப்புக்கள், இலக்கியப் பண்புகள் ததும்பும் பாடலடிகள், உவமை, உருவகம் முதலிய அணிவிகற்பங்களைக் கொண்டவையாகவும், செறிந்த சீர்மை உடையனவாகவும் காணப்படுகின்றன.

எனவே நடையியல் நோக்கில் நாவுக்கரசர் என்ற இச்சிறிய ஆய்வானது அவரின் மொழியாற்றல், சொல்லாட்சி, இலக்கணத் தெளிவு, இலக்கியச்சுவை போன்ற பல்வேறு கூறுகளால் ஓரளவிற்கு தெளிவுபடுத்தப்பட்டாலும் இது தொடர்ந்தும் ஆய்வுக்குரியதே.

## உசாத்துணை நூல்கள்


1. இரத்தினசிங்கம், சி.வ., *பன்னிருதிருமுறைகள் திரட்டு*, மணிமேகலைப் பிரசுரம், 2005.
2. சிங்காரவேலன்.சொ., *மூவர் தமிழ்*, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1966, ப.45-115.
3. சிங்காரவேலன்,T.M.P., *மெய்யடியார்கள்*, தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட், சென்னை, 1959, ப.34-44.
4. வெள்ளை வாரணனார்.க., *பன்னிரு திருமுறை வரலாறு*
5. Brown, R and Gilman, A. 'The Pronouns of power and Solidarity' Style in Language, (Ed), Sebeok, A. Cambridge, Mass: M.I.T.Press, 1960
6. Epstein, E.L. Language Style, London, Methnen & Co,Ltd. 1978
7. Thirumalai, M. S. 'Aspects of Language Use', All India Tamil Linguistic Association, Annamalai Nagar, 1983